செ. கு. எண்: 268 நாள் : 08.10.2013

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 8.10.2013

சென்னை பெருநகரக் காவல், ஆயுதப் படை, ''H'' நிறுமம், 46-வது அணியில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K. முனுசாமி அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 4.8.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகரக் காவல், சுப்பிரமணியபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.சந்தானம் அவர்கள் உடல்நலக் குறைவால் 10.8.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், அயனாவரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.V.சேகர் அவர்கள் 15.8.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்ட குற்றப் பிரிவில் துணைக் காவல் கண்காணிப்பாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.அசோகன் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 17.8.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. C.முருகையன் அவர்கள் 17.8.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர், மத்திய போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.அப்துல் அசம் கான் அவர்கள் 19.8.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், ஆயுதப் படை வாகனப் பிரிவில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ராகவேந்திரன் அவர்கள் 11.8.2013 அன்று தர்மபுரம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 20.8.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காவல் துறை துணை கண்காணிப்பாளர் திரு. அசோகன்; உதவி ஆய்வாளர் சேகர்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சந்தானம், முருகையன், அப்துல் அசம் கான், தலைமைக் காவலர் முனுசாமி, காவலர் ராகவேந்திரன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான துணைக் கண்காணிப்பாளர் அசோகன், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சந்தானம், தலைமைக் காவலர் முனுசாமி; மாரடைப்பால் காலமான உதவி ஆய்வாளர் சேகர்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் முருகையன்; அப்துல் அசம் கான்; சாலை விபத்தில் உயிரிழந்த காவலர் ராகவேந்திரன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**